ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2303/10 - 2022 ඔක්තෝබර් මස 26 වැනි බදාදා - 2022.10.26

2303/10 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 11/9/2/නයාබැදි ඇළ/C9.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2021/UD/49.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், அநுராதபுரம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட இல. 255 - கட்டம் 3, பகுதி I கிராம அலுவலர் பிரிவில், கட்டம் III கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 110210 (தொகுதி இல. 05, தாள் இல. 13) இல் துண்டு இல. 220, 221, 222, 224 எனக் காட்டப்பட்ட 0.1951 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட நான்கு (04) காணித்துண்டுகளின் விபரங்கள்:

**01. துண்டு இல. 220**
காணியின் பெயர்: கூம்பிச்சிக்குளம ஹேன; விபரம்: திறந்த தரிசு நிலம், மதில் சுவரின் ஒரு பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - ; விஸ்தீரணம்: 0.0006 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 221**
காணியின் பெயர்: - ; விபரம்: நயாபெந்தி எல, மதில் சுவரின் ஒரு பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - ; விஸ்தீரணம்: 0.1172 ஹெக்டயார்.

**03. துண்டு இல. 222**
காணியின் பெயர்: கூம்பிச்சிக்குளம ஹேன; விபரம்: திறந்த தரிசு நிலம், மதில் சுவரின் ஒரு பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - ; விஸ்தீரணம்: 0.0333 ஹெக்டயார்.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

04. **துண்டு இல. 224**

காணியின் பெயர்: கூம்பிச்சிக்குளம ஹேன; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - ; விஸ்தீரணம்: 0.0440 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.11.15 ஆந் திகதி மு.ப. 09.00 மணிக்கு கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.11.08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ.எம்.ஆர்.பீ.பி. ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
கிழக்கு நுவரகம் பலாத்த.

பிரதேச செயலகம்,
கிழக்கு நுவரகம் பலாத்த,
அநுராதபுரம்,
2022, ஒற்றோபர் 17.

EOG 10 - 0218